கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

அ.வ.எண்.382/2020 பி.வா.சா.1 மாலதி

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 23.03.2026

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) 1ம் பிரதிவாதி எனக்கு கிரையம் கொடுத்தவர் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி என் கணவர் என்றால் சரிதான். வழக்கு சொத்தானது வாதிகளின் தகப்பனார் ராக்கியப்ப கவுண்டருக்கும் 1ம் பிரதிவாதியின் தகப்பனார் முத்துசாமி கவுண்டருக்கும் வா.சா.ஆ. 1 1985 பாக சாசனப் படி பாத்தியப்பட்டதாகும் என்றால் சரிதான். முத்துசாமி கவுண்டருக்கு பிரிந்த சொத்துக்களை 1ம் பிரதிவாதியும் அவரது சகோதரிகளும் 2015 ல் பாகம் பிரித்து கொண்டனர் என்றால் சரிதான்.

2) வழக்கு பரிகாரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வாதிகள் வழக்கு தாக்கல் செய்த போது அவர் கோரிய பரிகாரங்களை 1ம் பிரதிவாதி கொடுக்க வேண்டும் என்று தான் தாக்கல் செய்தனர் என்றால் சரிதான். கடந்த 10-09-2020 அன்று 1ம் பிரதிவாதிக்கு வாதிகள் வா.சா.ஆ. 6 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினர் என்றால் சரிதான். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பு பெறப்பட்ட போது நான் கிரையம் பெற்றிருக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பிற்கு 1ம் பிரதிவாதி கொடுத்த பதில் அறிவிப்பிற்கு எதிராக வாதிகள் மீண்டும் ஒரு வழக்கறிஞர் மறு அறிவிப்பை வா.சா.ஆ. 8 23-09-2020 அனுப்பினர் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்புக்கள் கொடுக்கப்பட்ட காலத்தில் வழக்கு சொத்து தொடர்பாக என் கணவர் 2ம் பிரதிவாதி பெயரில் ஒரு கிரைய ஒப்பந்தம் போடப்பட்டு இருந்தது என்றால் சரிதான்.

எனவே வழக்கு தாக்கல் செய்யும் போது வாதிகள் என் கணவரையும் 2ம் பிரதிவாதியாக சேர்த்தே வழக்கு தாக்கல் செய்தனர் என்றால் சரிதான்.

3) இவ்வழக்கு நிலுவையில் இருந்த போது 27-01-2021 அன்று நான் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான்.

**(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

| |
|---|
| இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

**ஒப்பம் /-(மு.ச.ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி